**அசல்வழக்கு எண். OS.411 /2021- DW3 .**

**திருமதி.லலிதாம்மா க/பெ.சீனிவாச மூர்த்தி**

**நாள்:12.08.2025.**

**குறுக்கு விசாரணை வாதிகள் தரப்பில் :**

ராமையா எனக்கு என்ன வேண்டும் என்றால் அவர் எனக்கு தாத்தா வேண்டும். என் அம்மாவிற்கு அப்பா ஆவார். ராமையாவிற்கு 2 மகன்கள் 4 மகள்கள், மகனகள் பெயர் இருவருமே வெங்கட்ராமையா ஆகும் நாங்கள் பெரிய வெங்கட்ராமையா, சின்ன வெங்கட் ராமையா என்று அழைப்போம், மகள்கள் பெயர் முறையே எல்லம்மா, முனிராமக்கா, வெங்கடம்மா, ராஜம்மா,ஆகும். இதில் ராஜம்மா எனது தயார் ஆவார். என் அம்மாவிற்கு 5 ஆண் மகன்கள் 4 பெண் மகள்கள் ஆகும். நான் என் தாயாருக்கு மகள்களில் முதல் மகள் ஆவேன். நான் எதற்காக நீதிமன்றம் வந்திருக்கிறேன் என்றால் என் அம்மா வரமுடியாது என்பதால் நான் வந்திருக்கிறேன் என் அம்மா இந்த மாதம் 4ம் தேதி இறந்துவிட்டார். என் அம்மா எதில் கையெழுத்து செய்திருக்கிறார் என்றால் பெரிய மாமா, சின்ன மாமாவிற்கு உயில் எழுதி கொடுத்துள்ளார் அதில் என் தயார் சாட்சி கையெழுத்து செய்திருக்கிறார். 5 வருடத்திற்கு முன்பு அந்த உயில் எழுதப்பட்டதா என்றால் அது எப்போது எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. என் தாயார் படிக்கவில்லை. என் தாயார் கன்னடமொழியில் கையெழுத்து செய்வார். என் அப்பாவும் படிக்கவில்லை. என் அப்பாவும் கன்னடமொழியில் தான் கையெழுத்து செய்வார். பி.த.சா.ஆ 5 மற்றும் பி.த.சா.ஆ 6 சாட்சி கையெழுத்துகள் தெலுங்கில் பேடப்பட்டுள்ளது என்றும் அது என் தாயார், தந்தை உடைய கையெழுத்து இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த சாட்சி கையெழுத்துகள் கன்னடமொழியில் தான் உள்ளது. 2 சாட்சி கையெழுத்துகளும் ஒரே மையினால் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் இல்லை. அந்த உயிலில் என் அம்மாவின் பெயருக்கு பின்னால் கணவர் பெயரோ, விலாசமோ எழுதப்படவில்லை என்றும் அதேபோல் என் அப்பாவின் பெயருக்கு பின்னால் அவரது தகப்பனார் பெயரே, விலாசமோ எழுதப்படவில்லை

என்றால் சரிதான். பி.த.சா.ஆ 5 மற்றும் பி.த.சா.ஆ 6 ல் உள்ள கையெழுத்துக்கள் என் தாய் தந்தையுடைய கையெழுத்து என்று காட்டுவதற்கு அவர்களுடைய வேறு கையெழுத்துகள் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. பி.தசா.ஆ 5 மற்றும் பி.தசா.ஆ 6 ல் கையெழுத்துககள் என் அம்மா அப்பாவுடையது என்று எவ்வாறு சொல்கிறேன் என்றால் என் அம்மா அப்பாவின் கையெழுத்து எனக்கு தெரியும் என் அம்மா அப்பாவின் வேறு கையெழுத்துக்கள் வீட்டில் இல்லை. பி.த.சா.ஆ.1 ல் உள்ள கோபாலரெட்டி தேதி 23.11.2005 என் று எழுதப்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது. பி.த.சா.ஆ 5 மற்றும் பி.தசா.ஆ 6 ல் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் என் அம்மா அப்பாவுடையது கிடையாது என்றும் அது ஒரே மையினால் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது என்றும் மேலும் அந்த சாட்சி கையெழுத்துக்கள் தெலுங்கில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.தசா.ஆ 5 மற்றும் பி.தசா.ஆ 6 ல் உள்ள ாசாட்சி கையெழுத்துக்களை கையெழுத்து நிபுநருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபனை இல்லை. அதில் தேபி செட்டி என்று கையெழுத்து செய்ப்பட்டுள்ளது என்றால் இல்லை பாப்பி செட்டி என்று தான் கையெழுத்து செய்யப்பட்டுள்ளது. எனக்கு எதுவும் தெரியாது என்றும் பிரதிவாதிகள் அழைத்து வந்ததின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை. என் அம்மா சொல்லி எனக்கு சாட்சி கையெழுத்த செய்த விவரம் தெரியும். என் அம்மா என்னிடம் எப்போது சொன்னார் என்றால் இந்த மாதம் 3ம் தேதி சொன்னார். சாட்சி மீண்டும் அதற்கு முன்பும் சொன்னதாக சொல்கிறார். என் அம்மாவிற்கு 9 குழந்தைகள் உள்ள நிலையில் என் அம்மா எதற்காக என்னிடம் சாட்சி கையெழுத்துப்பற்றி சொன்னார் என்றால் நான் என் அம்மாவுடன் எப்போதும் இருப்பேன் அதனால் என் அம்மா என்னிடம் சொன்னார். என் அப்பா 2021 செப்டம்பர் மாதம் 2ம் தேதி இறந்துவிட்டார். என் அம்மா, அப்பா பெயரில் கர்நாடாகவில் சொத்துக்கள் எதாவது இருந்ததா என்றால் இருந்தது அதை விற்று விட்டார்கள். அந்த விற்பனை செய்த ஆவணத்தை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் முடியும். பி.தசா.ஆ.5 மற்றும் பி.தசா.ஆ 6ல் உள்ள சாட்சி கையெழுத்துக்கள் என் அம்மா, அப்பாவுடையது

அல்ல என்றும் நான் பிரதிவாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.